DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திங்கள்கிழமை 07ம் நாள் சாட்சியாகிய உசேன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உசேன் | வயது | 29 |
| த/பெ. | தமின் அன்சாரி | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | கூலிவேலை |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C. 43/2019**

( 1முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**முதல் விசாரணை 07.04.2025 அ.சா.4**

1. நான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 சக்திவடிவேலனை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. தேதி, மாதம் ஞாபகமில்லை. நான் வீட்டில் இருந்தபோது போலீசார் என்னிடம் வந்து கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 2வதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்டுகிறது).** என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. 10.07.2017ம் தேதி இரவு 8 மணிக்கு அரக்கோணம் நகர காவல் நிலைய குற்ற எண்392/2017 வழக்கில் உதவி ஆய்வாளர் என் முன்னிலையிலும், செல்வகுமார் என்பவர் முன்னிலையிலும், சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் இல்லை.

3. போலீஸ் விசாரணையில் சாட்சியாக பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாக

தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எனக்கு சம்பவத்தை பற்றி தெரியாது என்றால் சரிதான். போலீசார் கையொப்பம் கேட்டதால் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.